# Sub Court, Eraniel

O.S. No.25/2023
Date: 25.09.2023.
வா.சா.1 - திரு. எபநேசர் ஜோபு
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
முதல் விசாரணை தொடர்ச்சி

18.02.2022ம் தேதியிட்ட கிரயப் பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ.1. என் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது வா.சா.ஆ.2. என்னுடைய மருத்துவச் சான்று வா.சா.ஆ.3. நான் குளச்சல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு காவல் துறையினர் வழங்கிய மனு ரசீது வா.சா.ஆ.4. நான் கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.5. நான் தினசரி செய்தித்தாளில் கொடுத்த பொது அறிவிப்பு வா.சா.ஆ.6. நான் குளச்சல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.7. அதற்கு கொடுக்கப்பட்ட மனு ரசீது வா.சா.ஆ.8. என் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது வா.சா.ஆ.9. நான் மாவட்ட குற்றப் பிரிவு காவல் ஆய்வாளருக்கு கொடுத்த மனு கைநகல் வா.சா.ஆ.10. பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த சம்மதப் பத்திரம் வா.சா.ஆ.11.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.